# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 5 | நவம்பர் 1992 | இதழ் 11



வெளியிடுவோர் :

**ஈரோடு கிறிஸ்துவின் சபையார்**

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

ஈரோட்டில் நீங்கள் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : 2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002 (ரயில் குட்செட் சமீபம்)

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை

,, : பகல் 11-00—12-00...ஞாயிறு பள்ளி

,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை

செவ்வாய் : மாலை 7-15—8-30...மாதவக்காடு வேத ஆராய்ச்சி வகுப்பு

வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு

வெள்ளி : மாலை 7-00—8-30...ஜெப ஆராதனை (2-ம் வெள்ளி மாதாந்திர ஜெப ஆராதனை மாலை 5-00 முதல் இரவு 9-00 மணிவரை)

சனி : மக்கள் சந்திப்பு

## தலைப்புச் செய்திகள்


1. இயேசு அழுகிறார் 1 - 6

2. இதில் எல்லாம் என்ன இருக்கிறது? 7 - 11

3. சுபாவ அன்பு மறையும் போது மாற்று வழி என்ன? 12 - 15

4. புதிய ஏற்பாடு - ஓர் மேலோட்டப் பார்வை 16 - 21

5. ஒரு பெரிய கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது 22 - 28

# THIRUMARAIAASAAN

Editor
E. Z. SELVANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
2, Manalmedu Street, ERODE-638 002, Tamilnadu, India
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 5 | November—1992 | Issue 11


**ஆசிரியவுரை**

## இயேசு அழுகிறார்

தற்காலத்தில் அரசியல், சமுதாய, சமயங்களில் கொள்கை பலத்துக்கு மக்கள்கூட்டமே அளவுகோல் என்றொரு புதிய நடைமுறை அமுலாகி விட்டது. வேடிக்கை காட்டியும், ஆடியும், பாடியும், ஆர்ப்பாட்டங்கள் செய்தும், எப்படியோ மக்கள் கூட்டத்தைத் திரட்டிக் காட்ட வேண்டும். அதற்கு எந்த யுக்தியை வேண்டுமானலும் கையாளலாம். பிறகு அதற்குத் தங்களுக்குத் தேவையான முத்திரைகள் குத்தி, ''எங்கள் கட்சியின் செல்வாக்கைப் பாரீர்! ''எங்கள் இன மக்களின் எழுச்சி காணீர்'', ''எங்கள சமயநெறிகளைப் பின்பற்றுகிற பக்த கோடிகளின் எண்ணிக்கை காணீர்!'' என்ற நாளேடுகளில் முழுபக்க விளம்பரங்கள், நாற்சந்திகள் தோறும் பெரும் செலவில் பல வண்ணங்களில் விளம்பர போர்டுகள் — கட் அவுட் — ஊர் முழுவதும் தோரணங்கள் — வீதிகள் தோறும் ஒலிபெருக்கிகளின் ஓலங்கள் மூலம் தங்கள்பின்னால் ஒரு மாபெரும் மக்கள் சக்தி இருப்பதாகக் கூறி அரசாங்கத்தை மிரட்டுகின்றனர். அப்பாவி மக்களை நம்ப வைத்து குறிப்பிட்ட சிலர் தங்கள் நலனைப் பாதுகாத்துக் கொள்கின்றனர்.

சமீப காலத்தில் இந்த வியாதி கிறிஸ்தவ மார்க்கத்தையும் தொற்றிக் கொண்டிருக்கிறது. அண்மையில் நடைபெற்ற ஒரு உலகப் பிரசங்கியர் கலந்து கொண்ட ஒரு கூட்டத்துக்குப் போயிருந்தேன். அங்கே நான் கண்டதையும், கேட்டதையும் உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அந்தக்கூட்டம் நகரின் பிரபலமான சபைப் பிரிவுகள் அனைத்தும் ஒன்று சேர்ந்து நடத்தினதாகத் தெரிகிறது. அந்தக் கூட்டத்தைப் பற்றி பிரபல தமிழ், ஆங்கில நாளேடுகளில் முழு பக்க விளம்பரங்கள் வாரக் கணக்கில் வெளியிடப்பட்டிருந்தன. நகர் முழுவதும் மற்றும் சுமார் 30 கி.மீ. வட்டத்தில் உள்ள பட்டி தொட்டிகளிலும் பலவண்ணச் சுவரொட்டிகள் — நகரின் நுழைவாயிலில் அரசியல் தலைவர்களுக்கு வைக்கப்படுகிற அளவுக்கு கட் அவுட். அதுபோக லட்சக் கணக்கில் கைப்பிரதிகள்-வீதிகள் தோறும் ஆட்டோவில் அறிவிப்புகள்.

பல இலட்சம் ரூபாய்கள் செலவு செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிற இந்தக் கூட்டத்திற்கு வண்ண விளக்குகள் ஆயிரக்கணக்கில்-ஆளுயர மேடைகள், வீடியோ கவரேஜ் என்று ஏதேதோ புதுமைகள், மைதானத்தைச் சுற்றிலும் ஏராளவான கடைகள், அவைகளில் 'பிரபலங்கள்' எழுதியதாகச் சொல்லப்படுகிற நூல்கள் அவர் பாடிய கேஸட்டுகள், அன்னாருடைய உருவம் பொறித்த பேட்ஜ்கள், ஸ்டிக்கர்கள், பைபிள்கள்கூட இருந்ததாக ஞாபகம், வியாதி தீர்க்கும் எண்ணெய் வியாபாரம் விற்கிறவர்கள், வாங்குபவர்களுடைய பேரங்கள், போதாதற்கு சுண்டல், பாப்கார்ன், குழந்தைகளுக்கு பலூன் வகைகள் என்று ஏறக்குறைய ஒரு தேர்த்திருவிழாவைப் போன்ற சந்தடி.

அங்கே அமைக்கப்பட்டிருந்த ஆளுயர மேடையில் சமயக்குரவர்கள் மட்டுமல்ல அரசு உயர் அதிகாரிகள் (அவர்கள் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவர்களா என்று தெரியவில்லை), நகர்ப் பிரமுகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர் பெருமக்களும் வீற்றிருந்தனர்.

இதையெல்லாம் பார்த்த ஒரு கிராம சபை விசுவாசிக்கு ஒரே ஆனந்தம். எவ்வளவு திரளான கூட்டம். எத்தனை பேர் சத்தியத்தைக் கேட்க திரண்டு வந்திருக்கிறார்கள். கடைசி காலத்தில் எல்லா மக்களும் கிறிஸ்துவை அண்டிக் கொள்வார்கள் என்பது எவ்வளவு உண்மை என்று புளகாங்கிதம் அடைந்து நின்றார். ஆனால் அங்கே வந்திருந்த பக்த கோடிகள் சத்தியத்தை கேட்கிறதற்காக அங்கே வரவில்லை. தங்கள்கட்சித் தலைவர், அரசு அதிகாரிகள் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் வந்திருக்கும்பொழுது நாம் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் போனால் மரியாதையாக இருக்காதே, மேலும் என்னதான் செய்கிறார்கள், பேசுகிறார்கள், ஆள் எப்படியிருப்பார்? எந்த மாதிரி உடை அணிந்திருப்பார் என்றும் அவர்கள் விளம்பரப்படுத்தின மாதிரி வியாதிகள் நீங்குதா? பேய்கள் ஓடுகிறதா?

என்று வேடிக்கை பார்க்கிறதுக்கும் தான் வந்திருக்கிறார்கள் என்ற உண்மை அவருக்குத் தெரியாது, பாவம்!

கும்பகோணத்தில் மகாமகத்தின் போது கூடிய கூட்டத்தையும் அங்கு பக்தகோடிகள் மிதிபட்டுச் செத்ததையும் அவர் அறிந்திருக்க நியாயமில்லை.

சற்றே நகர்ந்து அங்கே நின்று கொண்டிருந்த சில பெரியவர்களிடம் கூட்டத்தின் சிறப்பைப் பற்றி விசாரித்தேன், "இப்படிப்பட்ட கூட்டங்களைப் போட்டு நம்முடைய ஒற்றுமையையும் வலிமையையும் புறஜாதி மக்களுக்குக் காட்ட வேண்டும். ஏனெனில் சமீப காலத்தில் கிறிஸ்தவ மார்க்கம் சுக்கு நூறாக உடைந்து சிதறி புற மதஸ்தர்கள் மத்தியில் ஒரு கேலிப் பொருளாகி விட்டது என்றும், ஆகவே நமக்குள் இருக்கிற வேற்றுமை உணர்வுகளை மறக்க முடியாவிட்டாலும், ஒரு சில நாளைக்காவது மறைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு முன்னால் நாங்கள் ஒற்றுமையாகத் தான் இருக்கிறோம் என்று காட்டிக் கொள்ள இது பயன்படும்" என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தார்.

அவருடைய ஆர்வத்தைப் பாராட்டி விட்டு அவருடைய அறியாமையை எண்ணி வேதனைப்பட்டேன். ஏனெனில் அவர் வெளியிட்ட கருத்து சிந்திக்க வேண்டிய விஷயம். உலகத்து மக்களை திருப்திப்படுத்துவது. தான் கிறிஸ்தவ மார்க்கத்தின் தலையாய நோக்கமா? அல்லது பரம பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதும், மகிமைப்படுத்துவதுமா? "**அவர்கள் தேவனால் வருகிற மகிமையிலும், மனுஷரால் வருகிற மகிமையை அதிகமாக விரும்பினார்கள்**" என்று பரிசுத்த ஆவியானவர் யோவான் மூலமாக உரைத்ததை நினைத்துக் கொண்டேன். (யோவான்: 12:43)

சுவிசேஷப் பிரகடனம் செய்யப்படுவதின் தலையாய நோக்கம்: மக்கள் மத்தியில் மண்டிக்கிடக்கும் பாவங்களையும், அதனால் விளையும் கேடுகளையும் அதற்குப் பரிகாரமாக தேவன் செய்திருக்கிற ஏற்பாட்டையும் அதை ஏற்றுக் கொண்டு கீழ்ப்படிய வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டி மனந்திரும்ப வேண்டும்; இல்லாவிட்டால் மடிந்து போவீர்கள் என்று எச்சரிக்க வேண்டும். அதை யோவான் ஸ்நானகனும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அவருடைய அதிகாரம் பெற்ற அப்போஸ்தலர்களும், சுவிசேஷப் பிரகடனத்தின் மையப் பொருளாக வைத்து தங்கள் பிரசங்கங்களைச் செய்தார்கள் (மத் 3: 1-10; மாற்கு 1: 4, 5) மத் 11: 20, லூத் 13: 1- 3, அப் 2: 38; அப் 3: 19, 20).

ஆனால் அந்தப் பிரபலப் பேச்சாளர் மனந்திரும்புவதைப் பற்றி வாயே திறக்கவில்லை. பாவத்தின் நச்சுத் தன்மையைப் பற்றி எச்சரிக்கவேயில்லை. அவருடைய இருபது நிமிஷத்துக்கும் குறைவான பிரசங்கத்தில் அவர் கூறியதின் சுருக்கம்: ''இயேசு நல்லவர், வல்லவர்; அவரை விசுவாசித்தால் உன் வியாதிகள் நீங்கும். உன்வாழ்க்கை சுபிட்சமடையும், எண்ணங்கள் நிறை-வேறும், உன் கஷ்டங்கள் தீரும். குடிசை கோபுரமாகும் என்பது தான். பல இலட்ச ரூபாய் செலவு செய்து கூட்டப்பட்ட அந்தக் கூட்டத்தின் மீதி நேரமெல்லாம், கேசட் விற்பனை, பற்றாக்-குறைத் தொகையை ஈடு செய்ய வசூல் வேட்டை, எங்கேயோ நடந்ததாகச் சொல்லப்பட்ட சில நோய்கள் குணமான சாட்சி-யங்கள், வட்ட, மாவட்டச் செயலாளர்கள், ஒருங்கிணைப்-பாளர்கள் அறிக்கைகள், இளம் பங்காளர் திட்ட சாதனைகள் இத்தியாதிக் காரியங்களே.

அருமை நண்பர்களே! பேயோட்டுவதற்கும், தாயத்து எண்ணெய் விற்பனை செய்யவும் மோடி மஸ்தான்களும், சாலையோர சாமியார்களும் இருக்கிறார்கள். நோய்களை குணமாக்க மருத்துவ விஞ்ஞானம் அரும்பெரும் சாதனை படைத்துக் கொண்டிருக்கிறது. நலிவுற்ற மக்களின் நல்வாழ்வுக்கு சமூக நலத்துறை இருக்கிறது. குடிசைகளை கோபுரமாக்க குடிசை மாற்று வாரியம் செயல்படுகிறது. பொறியியற் கல்லூரிகளை நிறுவ கொங்கு வேளாளர்களும், குலாளர்களும் இருக்கிறார்கள். ஆனால் பாவத்தின் பிடியிலிருந்து மனிதனை விடுவிக்க இயேசு கிறிஸ்துவை விட்டால் வேறு யார் இருக்கிறார்கள்? ஆகவே சுவி-சேஷர்களே, அவர் செய்த அந்த மாபெரும் தியாகத்தை மக்க-ளுக்கு எடுத்துச் சொல்வோம். மனிதனை ஆட்டிப் படைத்து அழிவுக்கு அழைத்துச் செல்வது பாவமே. அந்த பாவத்தின் நச்சுத் தன்மையை உணர முடியாமல் மக்களின் கருத்தை பிசாசு குருடாக்கி விட்டான். 2 கொரி (4:4) அந்தக் குருட்டுத்தன்மை நீக்கப்பட்டு பாவத்தினால் வரும் கேடுகளை தெளிவாகப்பார்க்கும் படி அவர்களுக்குப் பிரகாசமான மனக் கண்களைத் தர வேண்டும் என்று மன்றாடி ஜெபியுங்கள் (எபே 1:19) அதற்கேற்ற சத்தி-யங்களைப் போதியுங்கள்.

**''சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது. தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லா-வற்றிலும் பிரயோஜனமுள்ளது'' (1தீமோ. 4:08).** அதாவது சரீர முயற்சி உலக சம்பந்தமான காரியங்களை மேற்படுத்த கொஞ்சம் உதவியாக இருக்கலாம். ஆனால் தேவபக்தியானது இம்-மையிலும் மறுமையிலும் நன்மை பயக்கும் என்கிறார் பவுலடியார்.

சமூக சேவையா, இறைப்பணியா என்ற சவாலுக்கு அப்போஸ்தலர்கள் எடுத்த நிலை என்ன? ஆதித் திருச்சபையிலே ஒரு பிரச்சனை, கிரேக்க விதவைகள் சரியானபடி பராமரிக்கப்படவில்லை, என்று ஒரு புகார் அப்போஸ்தலருடைய கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. அதற்கு அவர்கள் அளித்த பதிலை அப்போஸ்தலர் ஆறாம் அதிகாரத்தில் வாசியுங்கள்." அப்பொழுது பன்னிருவதும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து, நாங்கள் தேவ வசனத்தை போதியாமல், பந்தி விசாரணை செய்வது தகுதியல்ல.

ஆதலால் சகோதரரே பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள். அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்.

நாங்களோ, **ஜெபம் பண்ணுவதிலும், தேவ வசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம்'' என்றார்கள் (அப். 6:2—4)**

சகோதரர்களே, அப்போஸ்தலருடைய ஆத்தும பாரத்தை — சுவிஷேசம் பிரகடனப்படுத்த வேண்டிய அவசியத்தை, அவசரத்தைக் கவனியுங்கள் ''அறுப்புமிகுதி, வேலையாட்களோ கொஞ்சம் என்று வேதனைப்பட்டு மனதுருகிறாரே நமது ஆண்டவர் (மத் 9:26 37] இன்றைக்கு அதை விட நிலைமை மோசமாகிக் கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். இந்தியாவின் 85 கோடி மக்களில் ஐந்து சத மக்களே கிறிஸ்துவை அறிந்திருந்தவர்கள். உலக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஒரு முறை கூடக் கேள்விப்படாத கோடிக் கணக்கான மக்கள் இருக்கின்றனரே. அவர்களைப் பற்றி நம்முடையபாரம் என்ன? **''பணத்தை வாங்குவதற்கும் வஸ்திரங்களையும் ஒலிவத் தோப்புகளையும், திராட்சைத் தோட்டங்களையும், ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும், வேலைக்காரிகளையும் வாங்குவதற்கும் இது காலமா?** என்று எலிசா தீர்க்கதரிசி அவனுடைய பொருளாசை பிடித்த வேலைக்காரன் கேயாசியைக் கடிந்து கொண்டாரே, ஏன் என்று எப்பொழுதாவது சிந்தித்துப் பார்த்தீர்களா? பொருளாசை கர்த்தருடைய மகிமையை விழுங்கி விடும் என்பதனால்லவா? கேயாசிக்கு இருந்த சூழ்நிலைகளை விட நமக்கு இருக்கிற சூழ்நிலைகள் அதிக சாதகமானது. தேவனுடைய வசனம் நம்முடைய மொழியில் கடந்த காலத் தவறுகளையும் அதன் விளைவுகளையும் எழுதி வைத்திருக்கிறது. [ரோமர் 15-4] அப்படியிருக்க நானும் நீயும் வரம் பெற்றவர்கள் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு அதைவிட கடுமையான குற்றத்தைச் செய்வோமானால் வரும் கோபத்துக்கு எப்படி தப்பித்துக் கொள்வோம்?

**"தன் எஜமானுடைய சித்தத்தை அறிந்து ஆயத்தமாயி ராமலும், அவனுடைய சித்தத்தின்படி செய்யாமலும், இருந்த ஊழியக்காரன் அநேக அடிகள் அடிக்கப்படுவான்** [லூக்;22:47] என்பதன் கருத்தை சிந்தித்துப் பாருங்கள்.

இயேசு நல்லவர் என்பதும் வல்லவர் என்பதும் யாருக்குத் தெரியாது? பிசாசுகள் செய்த அறிக்கையை நீங்கள் ஒரு நாளும் வாசிக்கவில்லையா?" .... இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே .... என்னை வேதனைப்படுத்தாதபடிக்கு உம்மை வேண்டிக் கொள்கிறேன்" [லூக் 8;28] "நசரேனாகிய இயேசுவே, .... எங்களைக் கெடுக்கவா வந்தீர், உம்மை இன்னார் என்று அறிவேன். நீர் தேவனுடையபரிசுத்தர் என்று சத்தமிட்டான்," [மாற்கு 1:24; லூக் 4;34] மேற்படி வசனங்கள் இயேசு தேவனுடைய குமாரன் என்றும் சத்துருவாகிய சாத்தான் அவருடையவல்லமையை உணர்ந்திருந்தான் என்பதையும் தெளிவுபடுத்துகிறதே.

மேலும் அவரை விசுவாசித்தால் போதும், நீ இரட்சிக்கப் படுவாய் என்ற போதனை சரியா? அப். 20:26 கூறுகிற தேவனுடைய முழு ஆலோசனை இது தானா? அப்படியானால் யாக்கோபு நிருபம் கூறுகிற கீழ்க்கண்ட வசனங்களுக்கு என்ன பொருள்? 2-ம் அதிகாரம் 14-26 வாசித்துத் தியானியுங்கள்.

கர்த்தருடைய ஊழியர்களே, வீண் பெருமைக்கும், இழிவான ஆதாயத்துக்கும், பேருக்கும், புகழுக்கும், அலைவதை விட்டு விட்டு எளிமையாய், நேர்மையாய் ஆத்தும பாரத்தோடு கர்த்தரைச் சேவியுங்கள். இறைவன் அளிக்கும் எந்த வரமும் அவரை மகிமைப்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட நன்கொடை. அதை உங்கள்புகழுக்கோ, செல்வாக்குக்கோ, நிதி திரட்டுவதற்கோ பயன்படுத்துவது மன்னிக் முடியாத குற்றம். **"அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள்"** என்று கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளித் கதவைத் தாளிடும் நிலைக்கு ஆளாகாதபடி திருந்தி நடவுங்கள் [மத் 7:21-23].

"வைத்தியர்களே உங்களை முதலில்குணமாக்கிக் கொள்ளுங்கள்" என்று கர்த்தரின் கடிந்து கொள்ளுதலுக்கு முதலாவது நாம் கீழ்ப்படிவோம், பின்னர் மற்றவருக்குப் பிரசங்கிப்போம்.

"மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். (1 கொரி 9:27) என அப்போஸ்தலன் பவுல் சொன்னது நமக்கும் பொருந்தும்.

**(இ. இசட். செல்வநாயகம்)**

# இதில் எல்லாம் என்ன இருக்கிறது?

நம்முடைய வாழ்க்கையில் நாம் என்ன நினைக்கிறோம்? என்ன சொல்லுகிறோம்? எங்கே வாழ்கிறோம்? எங்கே போகிறோம் நாம் மற்றவர்களை எப்படி நடத்துகிறோம்? என்ற காரியங்களில் நாம் மிகவும் கவனம் செலுத்துகிறோம். நாம் நடத்தும் வியாபாரம், தொழில் எல்லாவற்றையும் குறித்து நன்கு அறிந்து வைத்திருக்கிறோம். அரசியலை அலசுகிறோம்.

ஆனால் ஆன்மீக விஷயங்களுக்கு வரும்பொழுது அதற்கு முற்றிலும் எதிர்மறையாக நடந்து கொள்கிறோம். அதை அந்த அளவு குடைந்து பார்த்துக் கொண்டிருப்பதற்கு அதில் என்ன இருக்கிறது? நாம் என்ன போதகர் வேலைக்கா போகப் போகிறோம்? என்ற நினைப்பில் அசட்டை செய்து விடுகிறோம். ஞாயிற்றுக்கிழமையா? கோவில் பக்கம் தலையை காட்டி விட்டு வந்துவிட்டால் போதும். விசேஷ நாட்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் ஏதாவது ஒரு நேரம் போய் வந்திருக்கிற சிறப்புச் செய்தியாளரிடம் நமக்காக ஜெபம் செய்யச் சொல்லி ஒரு காணிக்கை கொடுத்து விட்டால் வேலை முடிந்தது என்ற எண்ணத்தில் தான் அநேகம் பேர் இருக்கிறோம். ஆனால் ஆன்மாவா? சரீரமா? எது முக்கியம் என்று கேட்டால், உடனே சந்தேகம் என்ன, ஆன்மாதான் முக்கியம் என்று பதில் வரும். சரீரத்தைவிட ஆன்மா முக்கியம் என்று நாம் ஒத்துக் கொள்கிற காரியத்துக்கு நாம் எந்த அளவு நியாயம் செய்கிறோம்?

சரீரத்துக்கு அடுத்த காரியங்களுக்கு ஆறு நாட்களையும் ஆன்மாவுக்கடுத்த காரியங்களுக்கு ஒரு நாளையும் தேவனே தாராள மனதுடன் நியமித்து இருக்கிறார். அந்த ஒரு நாளையும் நாம் அவரிடமிருந்து பிடுங்கி சரீரத்தை பேணுவதற்கும், உலக உல்லாசத்துக்கும் செலவிட முனைவது அடுக்குமா? சிந்தித்துப் பாருங்கள்.

மேலும் ஆன்மீக விஷயங்களில் ஒரு காரியம் முக்கியமா? இல்லையா? என்பதை முடிவு செய்வது உயர்மட்டக்குழுக்கள் அல்ல மெஜாரிட்டி அல்ல அல்லது உயர்பதவியில் இருக்கிறவரின் குறிப்பாணை அல்ல. கர்த்தராகிய இயேசுவே ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது'' என்கிறார் (மத் 28: 18) அதன் கருத்து என்ன? ஆன்மீகக் காரியங்களில் அனைத்து அதிகாரங்களும் அவருக்கே கொடுக்கப்பட்டிருக்கிற படியால், மனிதர்களாகிய நமக்கு அதில் மாற்றம் செய்யவோ, கூட்டவோ, குறைக்கவோ அதிகாரம் கிடையாது. வெறுமனே

அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவது தான் நமது கடமை. ஏனெனில் அவரது வார்த்தையே பிரமாணம். அதற்கு அப்பீல் கிடையாது.

இன்னும் சிலபேர்; ஒருவன் உண்மையும் உத்தமுமாய் இருக்கிறவரையில் அவன் எதை விசுவாசிக்கிறான் என்றுவிசாரணை செய்து கொண்டிருப்பது தேவையில்லாத விஷயம் என்று கூறுவர். சென்னை செல்லுகின்ற இரயில் ஒன்று ஈரோடு பிளாட்பாரத்தில் வந்து நிற்கிறது என்று வைத்துக் கொள்வோம். எதையும் விசாரிக்காமல் ஏறி உட்கார்ந்து கொள்வது விவேகமாகாது. ஏனெனில் சிலபெட்டிகள் திருச்சி செல்லலாம், வேறு சில பெங்களூர் செல்லலாம். அவைகள் ஜோலார் பேட்டையில் அவிழ்த்து விடப்படும். இன்னும் சில பெட்டிகள் பம்பாய் செல்பவைகளாக இருக்கலாம். அவைகள் அரக்கோணத்தில் நிறுத்தி வைக்கப்படலாம். வேறு எத்தனையோ காரியங்கள், அதே போல மார்க்க விஷயத்தில் போதிக்கப்படுகிற அனைத்தையும் ஏற்றுக் கொள்வது விவேகமாகாது. ''எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ளுங்கள்'' என்று வேதம் எச்சரிக்கிறது. ஏனெனில் கள்ள கிறிஸ்துக்களும், கள்ளத் தீர்க்கதரிசிகளும், எழும்பிக் கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக பெரிய அடையாளங்களையும், அற்புதங்களையும் செய்வார்கள். (மத் 24:24) என்று போதிப்பவர்களின் தராதரங்களையும் போதனையில் உள்ள நச்சுத்தன்மைகளையும் குறித்து விழிப்புடன் இருக்கச் சொல்லுகிறார். ''மேலும் சத்தியத்தை அறியுங்கள்! சத்தியம் உங்களை விடுதலையாக்கும் (யோவான் 8: 32) சத்தியம் விடுதலையாக்கும் என்றால், அசத்தியம் நம்மை அடிமைப்படுத்தும் என்றாகிறதல்லவா? சத்தியம் கையில் இருக்கும்போது தவறை ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? உண்மைக்கும் தவறுக்கும், சுதந்திரத்துக்கும் அடிமைத்தனத்துக்கும், இரட்சிப்புக்கும், அழிவுக்கும், எவ்வளவு வித்தியாசம் உண்டோ அவ்வளவு வித்தியாசம் பொய்யை விசுவாசிப்பதினாலும் உண்டாகும்.

இன்னும் சிலர் ஒருவன் ஞானஸ்தானம் பெற்றுக் கொண்டாலும், பெற்றுக் கொள்ளாவிட்டாலும் அதில் ஒன்றுமில்லை. ஒருவன் முழுகி ஞானஸ்தானம் பெற்றுக் கொண்டானா அல்லது தலைமேல் சிறிது தண்ணீரைத் தெளித்து விட்டார்களா? இதெல்லாம் என்னையா ஆராய்ச்சி? ! என்றெல்லாம் எரிச்சல் அடைவர். தேவனைப் பற்றியும் அவருடைய ஆசீர்வாதத்தைப் பற்றியும் அக்கரையில்லாத ஒருவருக்கு வேண்டுமானால் இவைகள் எல்லாம் தேவையற்ற ஆராய்ச்சியாக இருக்கலாம் கள்ளப் போதர்களில் சிலர் கூட இதெல்லாம் முக்கியமானவைகள் அல்ல. சிலுவையில் இருந்த கள்ளன் எந்த ஞானஸ்தானம் பெற்றான்? அவனை இன்று

என்னுடனே கூட பரதீசியில் இருப்பாய் என்று ஆண்டவர் சொல்ல-வில்லையா? என்று தங்கள் மேதா விலாசத்தையும் வேத அறிவையும் வெளிப்படுத்தி சப்பைக் கட்டுக் கட்டலாம். ஆனால் சத்திய வேதம் இதைப் பற்றி என்ன சொல்லுகிறது என்று பார்க்க வேண்டாமா?'' விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் ''(மாற்கு 16: 16) பேதுருவும் மற்ற அப்போஸ்தலர்களும் பெந்தேகோஸ்தே நாளில் கூடியிருந்த மக்களைப் பார்த்து ''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்-நானம் பெற்றுக் கொள்ளுங்கள்'' என்றார்கள். (அப் 2: 38) அப்போஸ்தலனாகிய பவுல் ''தண்ணீர் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் கர்த்தரோடு அடக்கம் பண்ணப்படுகிறோம்'' என்று கூறுகிறார் (ரோமர் 6: 3, 4: கொலோ 2: 12). நண்பர்களே, நீங்கள் உண்மையாகவே இரட்சிக்கப்பட விரும்பினால் இவைகளெல்லாம் முக்கியமான காரியங்கள் என்பதில் சந்தேகம் வேண்டாம். அதெல்லாம் உங்களுக்கு நோக்கமில்லை. இந்த உலகத்திலே மனிதனாகப் பிறந்து விட்டோம். நமக்கு ஒரு சமயமும், சபை-யும் வேண்டும். சபையில் இருந்தால் தான் ஆலயத்தில் திருமணம் கொடுப்பார்கள், அடக்கத்துக்குக் கல்லறையில் அனுமதிப்பார்கள். இப்படிப்பட்ட இவ்வுலகுக்குரிய நன்மைகள் போதும். பரலோகத்-தை யார் பார்த்தார்கள்? என்றெல்லாம் நினைப்பீர்களானால் இதையெல்லாம் படித்துக் கொண்டும், சிந்தித்துக் கொண்டும் இருப்பது வீண் வேலை தான்.

அதே போல, சபை விஷயத்தில் கூடத் தெளிவில்லாமல் தான் பெரும்பான்மையான மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். சபை ஒன்றா, பலவா, நீங்கள் கிறிஸ்து கட்டிய சபையில் அங்கம் வகிக்-கிறீர்களா? அல்லது மனிதர்களால் தோற்றுவிக்கப்பட்ட சபைகள் என்கிற ஸ்தாபனங்கள் ஒன்றில் அங்கமாக இருக்கிறீர்களா? என்று கேட்டு விட்டால் சிலருக்கு வருகிற கோபம் இவ்வளவு அவ்வளவு என்று வர்ணிக்க முடியாது. ஏதோ கேட்கவே கூடாத அபச்சார-மான கேள்வியாகத்தான் இதை எண்ணுகின்றனர். என்ன ஐயா, அந்த சபை, இந்தச் சபை என்று பேசி சபையை பிளவுபடுத்து-கிறீர்கள்? சபையா ஐயா, இரட்சிக்கிறது, ஒருவன் எந்த சபையில் இருந்தால் என்ன? யோக்கியமாய், ஒருவனுக்கு கெடுதல் செய்யா-மல் வாழ்ந்தால் போதும், மற்றது எல்லாம் வேண்டாத விவா-தம் என்று காரசாரமாகப் பொரிந்து தள்ளுவர். இவர்களுடைய உணர்ச்சி வசப்பட்ட வசவுகளைக் கேட்பதா? கர்த்தருடையவார்த்-தையை ஏற்றுக் கொள்வதா? சிந்தித்துப் பாருங்கள் ''நான் என் சபையைக் கட்டுவேன்'' என்றார் இயேசு (மத்.16:18) அதன்படி-

யே அவர் கட்டவும் செய்தார். அப்போஸ்தலர் 'இரண்டாம் அதிகாரத்தில் முதன்முறையாக சுவிசேஷத்தைப்பிரகடனம் செய்த சம்பவத்தை வாசிக்கிறோம். சுமார் மூவாயிரம் பேர் அன்றைய தினம் இரட்சிக்கப்பட்டார்கள், அதுவே முதல் முதலில் தோற்றுவிக்கப்பட்ட சபை, அதே பாணியைப் பின்பற்றி எங்கெல்லாம் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதோ, எங்கெல்லாம் மக்கள் விசுவாசித்துக் கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்களோ, எவர்கள் எல்லாம் ஒன்று கூடி அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும், ஜெபத்திலும் உறுதியாய்த் தரித்திருந்தார்களோ (அப். 2:38-47) எவர்கள் எல்லாம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்களோ (அப் 11:26) அவர்கள் எல்லாம் கிறிஸ்துவின் சபையார்கள் (ரோமர் 16:16) அன்று மட்டுமல்ல. இன்றும், இனி வரும் நாட்களிலும் அதே முறைகளைப் பின்பற்றி சபை நிறுவப் படலாம். அந்த ஒரு சபை தான் கர்த்தரால் கட்டப்பட்டது. (மத்.16:18) அந்த ஒரு சபைக்காகத்தான் கர்த்தர் தம் இரத்தத்தைச் சிந்தினார். (அப்.20:28) அவரே, அதன் இரட்சகர் (எபே 5:23) அதுவே அவருடைய பெயர் தரித்தது (ரோமர் 16:16) அதை மீட்டுக் கொள்வதற்காகவே அவர் மீண்டும் வருகிறார். (1 தெச 4:16,17).

இப்பொழுது நாம் இவைகளையெல்லாம் சொல்லும் போது ஏற்றுக் கொள்ளாமல் நையாண்டி செய்வார்கள், நோவாவின் காலத்தில் கூட ஜலப் பிரளயத்தைப் பற்றி நோவா பிரசங்கித்த போது மக்கள் அவனை அசட்டை செய்தார்கள். ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மழை வந்தது, வெள்ளம் பெருகியது. மக்கள் மடிந்து கொண்டிருந்த பொழுது தான் நோவாவின் எச்சரிப்பை நினைத்துப் பார்த்தனர். காலம் கடந்த சிந்தனை பயன் தரவில்லை. அது போலவே கர்த்தர் தம்முடைய சபையை எடுத்துக் கொள்ள மீண்டும் வரும் போது சம்பவிக்கும். அப்பொழுது இரட்சிப்புக்கும் அழிவுக்கும் உள்ள வித்தியாசம் தெரிய வரும்.

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் பெயரை மாத்திரமே தரித்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னாலும் அப்படித்தான். பெயரில் என்னையா இருக்கிறது? என்று கோபப்பட்டுக் கொள்கின்றனர். ஆனால் "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லையென்று" வேதாகமம் கூறுகிறது. (அப்.4,12) உலக வழக்கில் எடுத்துக் கொண்டாலும் ஒருவன் தன் குடும்ப பாரம்பரியத்தைக் குறித்து பெருமிதம் கொள்கிறானே! அதே போல நாம் அவரைப் பின்பற்றுபவர்களாகவும், அவருடைய குடும்பமாகிய சபையில் அங்கம் வகிக்கிறவர்களாகவும் இருப்பதில் பெருமையுடையவர்களாய் இருக்க வேண்டாமா? தனிப்பட்ட முறையில் நாம் கிறிஸ்-

தவர்கள் (அப்.11;26) சபை என்று வரும் போது நாம் கிறிஸ்து-வின் சபையார், (ரோமர் 16;16) அது நம்மை இன்னார் என்று அடையாளம் காட்டி, நாம் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் என்று உலகுக்கு அறிவிக்கிறது. நாம் கிறிஸ்தவர்கள் தான் என்-றால் அவருடைய பெயரைத் தரித்துக்கொள்ள ஏன் தயக்கம்? அவருடைய பெயரைத் தரித்துக் கொண்டு அவரைப் பெருமைப் படுத்த வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அவர் பெயரைத் தரித்துக் கொள்ள நாம் வெட்கப்படுகிறோம் என்று பொருள். அவருக்குரிய இடத்தை எடுத்து மனிதர்களுக்கும், நாட்களுக்கும், பண்டிகைகளுக்கும் வேறு எதெதற்கோ சூட்டி மகிழும் நண்பர்-களே! சிந்தியுங்கள்! நமக்காக சிலுவையில் மரித்தது யார்? கிறிஸ்துவா? மனிதனா? சாத்தானா? யாருடைய இரத்தத்தி-னாலே உங்கள் பாவங்கள் கழுவப்பட்டன? நீங்கள் எவர்களுடைய பெயரைத் தரித்துக் கொண்டீர்களோ அவர்களே உங்கள் இரட்-சகர் என்று பொருள்படுகிறது. பாவியான ஒரு மனுஷன் இன்-னொரு பாவியை இரட்சிக்க முடியாதே!

நண்பர்களே! மார்க்கம் சம்பந்தப்பட்ட காரியங்களில் நாம் யாரைப் பின்பற்றுகிறோம், எந்த சபையில் அங்கம் வகிக்கிறோம், நாம் எவ்வாறு ஆராதிக்கிறோம், நாம் என்ன பிரசங்கிக்கிறோம். நாம் எவ்வாறு வாழ்கிறோம், நம்முடைய நித்தியத்தை எங்கே கழிப்போம் என்பவைகள் எல்லாம் மிக மிக முக்கியம். இவைகளை-யெல்லாம் தேவையில்லாத விஷயங்கள் என்று அலட்சியப்படுத்-தினால் தேவனையும், சட்ட நியாயங்களையும் அறிவுக்கேற்றவை-களையும், சத்தியத்தையும் அசட்டை பண்ணுவதற்குச் சமம். தேவன் சம்பந்தப்பட்ட அனைத்துக் காரியங்களும், நமக்கும் தேவனுக்கும் உள்ள உறவு போன்ற காரியங்களும் நித்திய நித்தியம் இருக்க வேண்டியவைகள். அதை உணர்ந்தவர்களாய் வாழ்வது புத்திசாலிகளின் கடமை.

J.C. சோட்

**கீழ்ப்படிந்து மன்னிப்பைப் பெற்றுக் கொள்;**
**மாட்டேன் என்றால் மடிவது நிச்சயம்**

வழக்காடுவோம் வாருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்! உங்கள் பாவங்கள் சிவரென்றிருந்-தாலும், உறைந்த மழையைப் போல் வெண்மை-யாகும். அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்-தாலும் பஞ்சைப் போலாகும்.

நீங்கள் மனம் பொருந்திச் செவி கொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள்.

மாட்டோம் என்று எதிர்த்து நிற்பீர்களாகில் பட்டயத்துக்கு இரையாவீர்கள். கர்த்தருடைய வாய் இதைச் சொல்லிற்று.

(ஏசாயா 1: 18- 50)

பெண்கள் பகுதி

# சுபாவ அன்பு மறையும் போது மாற்று வழி என்ன?

முன்பொரு காலத்தில் திருமணத்தை நடத்தி வைப்பது பெற்றோருடைய ஏகபோக உரிமையாக இருந்தது. இன்னும் கூட அந்த நடைமுறை சில சமுதாய அமைப்புகளில் மாறாமல் தான், இருக்கிறது, அவைகளில் சம்பந்தப்பட்ட பெண் அல்லது பையனின் உணர்வுகள், விருப்பு வெறுப்புகளை விட குடும்ப அந்தஸ்து, குடும்பத்தில் உள்ள மற்ற அங்கத்தினர்களின் அபிப்பிராயங்கள், சீர் சிறப்பு என்று பல காரியங்கள் அலசி ஆராயப்படுகின்றன.

இவ்வகை திருமணத்திற்குப் பிறகு புதிதாக இணைக்கப்பட்ட தம்பதிகளுக்குள் நல்லுறவும், புரிந்து கொள்ளுதலும் அமைந்து விட்டால் சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பெய்த மகிழ்ச்சிதான், சில வேளைகளில் எதிர் மறையான விளைவுகளும் ஏற்படுவதுண்டு.

ஆனால் இப்பொழுதெல்லாம் காலம் மாறி விட்டது. இளைய பரம்பரை தங்கள் விருப்பத்திற் கேற்ற ஜோடிகளைத் தாங்களே தேர்வு செய்து கொள்ளும் பழக்கம் வேகமாக வளர்ந்து வருகிறது. சினிமா, தொலைக்காட்சிகள் பார்ப்பதினாலும், கல்லூரி வாழ்க்கையிலும் அவர்கள் காண்கிற, அனுபவிக்கிற சூழ்நிலைகள் காரணமாக தங்களுடைய இரசனைக் கேற்ப ஜோடிகளைத் தேடிக் கொள்வதில் அவர்களுக்குள்ள உரிமையை நிலை நாட்ட முயல்கிறார்கள். அது இயற்கையே. அதில் உள்ள பிரச்சினை என்ன வென்றால் வெறும் சிருங்கார உணர்ச்சிகளை மட்டுமே சார்ந்து நிற்கும் இத் திருமணங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு சாயம் வெளுக்க ஆரம்பிக்கும் ''மோகம் முப்பது நாள்; ஆசை அறுபது நாள்'' என்பது பழமொழி.

அன்றாட வாழ்க்கைப் பிரச்னைகள், பொறுப்பு சுமைகள் அவர்களை அழுத்தும்போது நிலை குலைந்து போவார்கள். உணர்ச்சிகள் என்பது சூழ்நிலைகளால் மாறக் கூடியவைகள். ஒரு கட்டத்தில் உல்லாசப் பறவைகளாக உலா வந்தவர்கள், துன்பச் சூறாவளியில் சிக்கிச் சீரழிவார்கள் மகிழ்ச்சி துக்கமாக மாறும், மனஸ்தாபங்கள் வளர்ந்து, வார்த்தைகள் தடித்து சண்டையில் முடியும். கண்ணே, மணியே, கற்கண்டே, என்று காதல் மொழி பேசிய முன்னாள் காதலன்-தற்கால கணவனின் சீற்றமும், கோப-

மும், வெறுப்பும். மனைவியின் ஸ்தானத்துக்கு மாற்றப்பட்ட காதலிக்கு மனக் குழப்பத்தை ஏற்படுத்தும்.

இவ்வளவு விரைவில் என் கனவுக் கோட்டைகள் சரிய ஆரம்பித்து விட்டதே, இனி என்ன செய்வேன். பெற்றோர்களையும் பகைத்துக் கொண்டோம் என்று கண்ணீர் சிந்துவாள். அவள் சினிமா படங்களில் பார்த்த கணவன்-மனைவி சண்டைகள், அதிரடி நடவடிக்கைகள் ஆகியவைகளை, நினைவு கூருவாள். அந்தப்' பாணியில், மணமுறிவுதான் பரிகாரம் என்ற திடீர் முடிவுக்கும் வருவாள், பாவம்!

சகோதரியே, கொஞ்சம் பொறு. வாழ்க்கை வேறு; சினிமா வேறு. உண்மை அன்பு என்பது வெறும் உணர்ச்சியை மட்டும் அடிப்படையாகக் கொண்டது அன்று. சட்டி சுட்டதடா, கை விட்டதடா" என்று திடீரென்று பின் விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் அவசரப்பட்டு விடக்கூடாது. குடும்ப வாழ்க்கை என்பது குறைந்தபட்சம் நான்கு பண்புகளின் மீது கட்டப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப்பார்.

1. **பால் உணர்ச்சிகளை மையமாகக் கொண்ட அன்பு** இது தான் இளைஞர்களையும் காரிகைகளையும் அதிகமாகச் சுண்டி இழுப்பது; இதில் தவறு ஒன்றுமில்லை. இது தேவனால் கொடுக்கப்பட்ட ஓர் ஈவு என்று சொன்னாலும் தவறல்ல 'இந்தக் கவர்ச்சி தான் ஒரு ஆணையும், பெண்ணையும் திருமணத்துக்கு சம்மதிக்க வைக்கிறது' இந்த இயல்பு திருமணத்துக்கு அத்தியாவசியமானதும் கூட' இதன் முழுஅர்த்தத்தையும் ஆதி 29:20 ஒருவாறு விளக்குகிறது. **'யாக்கோபு ராகேலுக்காக ஏழு வருஷம் வேலை செய்தான். அவள் பேரில் இருந்த பிரியத்தினாலே அந்த வருஷங்கள் அவனுக்குக் கொஞ்ச நாளாகத் தோன்றினது** என்று ஒரு பேருண்மையை வெளிப்படுத்துகிறது.

2. **நட்புறவு ;** இது ஒத்த குணமுடைய நண்பர்கள் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பு. ஒரு இளைஞனும், ஒரு கன்னிகையும் இப்படிப் பட்ட அன்பை முதலில் வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒருவருடைய தன்மை, நடவடிக்கைகள், சிந்தனையோட்டங்கள் ஆகியவைகளை அதிகதிகமாகத் தெரிந்து கொள்ள இந்த நட்புறவு வளரும். சிறந்த நட்பு என்பது ஒருவர் மற்றொருவருடைய தவறுகளையும், குறைகளையும் பெரிது படுத்தாது பொறுத்துக் கொள்வதாகும். எந்த ஒரு பிரச்சனையையும் மனம் விட்டுப்பேசி, கண்டிப்பாய் ஏற்றுக் கொள்ள

முடியாது என்பதைக் கூட கண்ணியமான முறையில் சொல்லி நட்பு முறியாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட நட்புறவும் பால் கவர்ச்சியால் ஏற்படும் அன்பும் திருமணம் என்னும் அழகிய மாளிகையின் அடித்தளங்கள்.

3. மூன்றாவது வகையான அன்பை **குடும்ப பாசம்** என்று சொல்லலாம் பெற்றோர்-பிள்ளைகள், சகோதர சகோதரிகள், மாமனார் மாமியார், மைத்துனர்-மைத்துனிகள் இடையே பாராட்டபட வேண்டிய அன்பு. ''தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்'' என்பது பழமொழி. அதாவது இரத்த பாசப் பிணைப்பு இவ்வுணர்வு நம்முடைய குடும்பத்தைப் பற்றி மற்றவர்கள்மோசமாக விமரிசிப்பதையோ, நம்முடைய குடும்பத்தைச்சேர்ந்த ஒருவரை மற்றவர்கள் துன்புறுத்துவதையோ சகித்துக் கொள்ளாது. அவர்களுக்காக வக்காலத்து வாங்கும், போராடும், சார்ந்து பேசும்.

மேற்சொன்ன மூன்று வகை அன்புகளும் சாதாரண சூழ்நிலைகளில் நல்லமுறையில் செயல்பட்டுமகிழ்ச்சியாகவும், சமாதானமாகவும் இருக்கத் துணைபுரியும். ஆனால் மனித உணர்வுகள் எப்போதும் ஒரே சீராக இருப்பதில்லை. திடீரென்று பூகம்பம் வெடிக்கும், புயல் எழும்பும், குடும்பம் என்னும் கப்பல் கவிழ்ந்து விடும் அபாயம் தென்படும்.

கணவன் குடும்பப் பொறுப்புகளை மறந்து, உதாசீனப்படுத்தி மனைவி மேலும் பிள்ளைகள் மேலும் வெறுப்புற்று எதற்கெடுத்தாலும் எரிந்து விழுவான். குடிப்பழக்கம், தகாதசேர்க்கை வருமான, இழப்பு, கடன் தொல்லைகள் என்று பலவித சூறாவளிகள் தாக்கும். சகோதரியே, பெண்மைக்கு உரிய சிறப்புப் பண்புகளைப் பிரயோகிக்க தக்க தருணம் இதுவே. இச்சிறப்புப் பண்பை நாம் எங்கே தேடுவது? கவலைவேண்டாம். அதை தேவன் நமக்கு தமது புத்தகத்தில் எழுதி வைத்திருக்கிறார். கற்றுக் கொண்டு பயன் அடைவோம்.

அன்பையும், மதிப்பையும் கேட்டுப் பெற்றுக் கொள்ள முடியாது. மற்றவர்களுடைய தூண்டுதலினால் நட்பு வளராது. நமக்கு பிடிக்காத ஒருவரை நேசிப்பது சிரமமான காரியம். உணர்ச்சிகளை உருவாக்கலாம் அன்பை வளர்க்கலாம் உத்திரவிட முடியாது. ஆனால் கர்த்தர் நமக்குக் கற்பிக்கிற அன்பு கட்டாயப்படுத்தும் இயல்புள்ளது. இது நம்முடைய உணர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டதல்ல'' உன் சத்துருவை நேசி'' (மத் 5:44) இது ஓர் அன்புக்கட்டளை இதற்கு நாம் நமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து கீழ்ப்படியவேண்டும். இதில் நம்முடைய உணர்வுகளுக்கு இடமில்லை.

ஒருவர் நமக்கு தீங்குநினைக்கிறதினாலும், பேசுகிறதினாலும் அல்லது செய்கிறதினாலும் தான் அவனை நாம் சத்துருவாக எண்ணுகிறோம். அப்படியிருக்க அந்த கொடியவனை நேசிப்பது எங்ஙனம்? இது அநேகருடைய கேள்வி. இயேசுகிறிஸ்து அதற்கும் பதில் கூறியிருக்கிறார்'' உங்களை சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களை பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும், உங்களைத் துன்புறுத்துபவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்'' (மத் 5:44).

நாம் முன்பு குறிப்பிட்டுள்ள மூன்று வகையான சுபாப அன்பும் தணிந்து செயலற்று போகும்போது தேவனால் கற்பிக்கப்பட்ட இச்சிறப்பு அன்பு கை கொடுக்கும். உணர்ச்சிகளால் ஆளப்பட்டு, நிலைதடுமாறி சத்துருவைப் போல நடந்து கொள்ளும்; என் கணவனை நான் நேசிப்பேன். நான் அவருடைய தலைமை பேணுவேன், அதற்கும் உள் நோக்கம் கற்பித்து என்னைத் திட்டி, அடித்து உதைத்துத் துன்புறுத்துவாரானால் என் ஆண்டவர் எனக்குக் கற்பித்த கட்டளையின்படி அவருக்காக நான் கண்ணீர் விட்டு ஜெபிப்பேன், முழங்காலில் நிற்பேன் என்று உறுதியோடு இருங்கள். நள்ளிரவில் நீங்கள் சிந்தும் சூடான கண்ணீர் அவருடைய முகத்திலும் மார்பிலும் விழட்டும். கர்த்தர் நிச்சயமாய் ஒரு நாள் அவரைச் சந்திப்பார். நீங்கள் வடித்த கண்ணீரும் ஏறெடுத்த ஜெபமும் வீண் போகாது. ஏற்ற காலத்தில் அவர் மனம் மாறும். அப்பொழுது உங்கள் மெய்யன்பு, கடமையுணர்வைப் புரிந்து கொண்டு முன்னிலும் அதிகமாய் நேசிப்பார். புயலுக்குப்பின் அமைதி ஏற்படுவதைப் போல உங்கள் வாழ்விலும் அமைதியும் சமாதானமும் ஏற்படும்.

பெட்டி பார்ட்டன் சோட்

அஞ்சல் துறையின் விரைவுத் தபால் வசதியைப் பயன்படுத்தி பயன் பெறுங்கள்

# புதிய ஏற்பாடு - ஓர் மேலோட்டப் பார்வை

''அவர் வருகின்றார் என்று அந்த ஊருக்குள்ளே சொல்லப்பட்டது''

ஆம்.... மனிதருக்குள் வாழும் இயேசு தேவனுடைய ஒரே பேறான குமாரன் வருகின்றார்.

அவர் நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்தார்!

மக்கள் விடியற்காலை முதலே அவர் வரவேண்டிய அவ்வூர் பெரிய தெரு வழியே கூட்டம் கூட ஆரம்பித்தனர்.

மக்களின் கண்களில் ஆச்சரியமும், நம்பிக்கையும் நிறைந்த பார்வை.

நிரந்தர விடுதலைக்காக ஏங்கும் பல்வேறுபட்ட வியாதியஸ்தர்கள், சுகமளிக்கும் கரங்களைக் கண்டிடக் காத்திருந்தனர்.

குருடர்கள் வழியிலே.... நின்று தேவனுடைய குமாரனே எங்களுக்கு இரங்கும் எனக் கூவிக் கொண்டிருந்தனர்!

''அவரின் வஸ்திர தொங்கலின் முனையையாகிலும் தொட்டால் போதும் என் தீராத வியாதி என்னை விட்டு நீங்கும்'' — பெரும்பாடுள்ள தாய்!

அவருக்குள் ஒளி இருந்தது! அந்த ஒளி எந்த மனிதனையும் பிரகாசிக்கிற மெய்யான ஒளி.

மக்கள் ஓர் புதிய வாழ்க்கையை
புனித வாழ்க்கையை
புண்ணிய வாழ்க்கையை
அவருக்குள் தொடங்கக் காத்திருந்தனர்!
ஏனென்றால்,
அவரிடத்தில் சேருகிறவன் கைவிடப்படுவதில்லை.

அவர்—பாவத்தில் மாண்டு சீரழிந்துபோன சிக்கலான வாழ்க்கைக்கு

தமது மரணத்தினால்,

தாம் சிந்திய இரத்தத்தினால் பாவ மன்னிப்பளித்து தம்முடைய புதிய ஆவிக்குரிய இராஜ்ஜியத்துக்குள் சேர்த்து நித்திய வாழ்வை அளிக்கின்றார்,

அவருடைய போதனைகள் நொறுங்கிச் சிதறுண்டு போன ஆன்மாவுக்கு அருமருந்தாம்!

''இந்த இயேசு எப்படிப்பட்டவர்?''

தன் உள்ளத்தைப் போலவே உடலிலும் குள்ளமான சகேயு என்ற மனிதனுக்கு ஆசை வந்தது! அவன் நீண்ட நாட்களாகவே தன் உண்மையான ஆன்மாவைப் பற்றி அறியவும்—பாவத்திலிருந்து மீளும் வழியென்ன என்று ஆராயவும் ஆவலாயிருந்தான்.

நல்லவேளை அவர் வருகின்றார்!
நான் எப்படி அவரைப் பார்ப்பது?
நான் குள்ளனாயிற்றே;
மக்கள் மத்தியிலே நான் போனதும்
பரிகசிக்கப்படுவேனே;
ஒன்று செய்வேன்
யாரும் என்னைப் பார்க்க முடியாத

காட்டத்தி மரத்தில்:

அது-மரங்களிலே கைவிடப்பட்டது

பிரயோஜனமற்றது
பயன் படாதது
அடர்த்தியானது;

ஆம்; அதிலே நான் உயர ஏறியாருக்கும் தெரியாத வண்ணம் அவரை கண்ணோக்குவேன் என்றான். (லூக்கா 19:1-10)

ஆம், நண்பர்களே ;

இயேசு கிறிஸ்துவை-அவரின் புதிய ஏற்பாட்டை இன்றைக்கும் அறிந்துகொள்ள வேண்டுமானால் எருசலேமுக்கு வெளியே மண்டையோடு போன்ற கபாலஸ்தலத்தில் மனிதரால் புறக்கணிக்கப்பட்ட கைவிடப்பட்ட சிலுவை மரத்தின் மீதேறி (காட்டத்தி மரத்தில் அல்ல) - பார்க்க வேண்டும்.

மனுகுலத்தின் பாவமும்-சாபமும் நீங்கும்; குருதி வடியும் அந்த சிலுவை மேலே ''எல்லாம் முடிந்தது என்று'' சொல்லி நியாயப் பிரமாணத்தை நிறைவேற்றினாரே, அங்கிருந்தே நானும் புதிய ஏற்பாட்டிற்கு அறிமுகத்தை துவக்குகின்றேன்.

சிலுவையே புதிய ஏற்பாட்டின் ஆரம்பம், அடித்தளம். வேத வாக்கியங்களின்படியும், தாம் சொன்னபடியும் மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாளில் அவர் உயிர்த்தெழுந்தார்.

சுமார் நாற்பது நாட்கள் பரலோக இராஜ்ஜியத்தைப் பற்றி தமது அடியாராகிய அப்போஸ்தலருக்கு மீண்டும் போதித்து, தாம் மரித்தும்-உயிரோட இருப்பவராகக் காட்சி தந்து பின்னர் பரமேறினார்.

பரிசுத்தாவியின் வாக்குத்தமும் பாவ மன்னிப்பும் எருசலேம் துவங்கி சொல்லப்பட வேண்டும் என அவர்களுக்கு கட்டளையிட்டார்.

''உலக முழுவதும் போங்கள்''
''நற்செய்தியை அறை கூவுங்கள்''
''நம்புவோருக்கு .... கீழ்படிவோருக்கு

பாவ மன்னிப்பு அருளும் ஞானஸ்நானத்தை கொடுங்கள்'' என்று சொல்லி பரமேறினார்.

அவர் வருகின்றார்; மீண்டும் வானத்திலே வருகிறார்' சபையாகிய தம்முடைய மணவாட்டியை தம்மிடம் அழைத்துச் செல்ல அவர் வருகின்றார்.

அவர் கூறியபடியே, சுமார் ஐம்பதாவது நாளில் எருசலேம் நகரில் அப்போஸ்தலர்கள் பரிசுத்தாவியினால் ஞானஸ்நானம் பெற்றனர்.

அப்போஸ்தலனாகிய பேதுரு சுவிசேஷத்தை முதன் முறையாகப் பிரகடனம் செய்தார்.

அதைக் கேட்ட மக்களில் மூவாயிரம் பேர் விசுவாசித்து மனம் திரும்பி கிறிஸ்துவின் அதிகாரத்தை அறிக்கையிட்டு பாவமன்னிப்பிற்காக ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்க்கையை பரிசுத்த ஆவியின் வரத்தோடு துவக்கினர்!

இது கி.பி. 33ம் ஆண்டில் நிகழ்ந்தது. எருசலேமில் துவங்கியது. பெந்தேகோஸ்தே பண்டிகை நாளில் ஆரம்பமானதினாலே இது பெந்தேகோஸ்தே சபையல்ல-கிறிஸ்துவின் சபை.

புதிய ஏற்பாடு: என்பது புதிய திட்டம் அல்லது புதிய உடன்படிக்கை-மனிதனுக்காக தேவனுடைய திட்டம். ஆரம்பத்தில் ஓர் ஏற்பாட்டை தேவன் மனிதருக்குத் தந்தார். அதிலே அவர்கள் நிலைத்திருக்கவில்லை.

எனவே அதை பழமையாக்கி, சிலுவையிலே அறைந்து, ஆணியடித்து நிறைவேற்றினார்.

எல்லா மனிதருக்காகவும் யுகத்தின் முடிவாகவும் புதிய ஏற்பாடு வந்தது. இதுவே தேவனுக்கும் மனிதருக்கும் இடையே இன்று நடைமுறையில் உள்ளது.

கிறிஸ்துவின் மாசற்ற இரத்தத்தினால் பிரதிஷ்டை பண்ணப்பட்டது. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினாலே உறுதியாக்கப்பட்டது.

இது பரிசுத்தாவியினால் சுமார் எட்டு ஆசிரியர்களாலே எழுதப்பட்டது. 27 புத்தகங்களால் ஆன இவ்வேற்பாடு கிரேக்க மொழியிலிருந்து தமிழிலே கி.பி பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில். தஞ்சையில் உள்ள தரங்கம்பாடியில் இந்திய அச்சு வரலாற்றிலேயே முதன் முறையாக தமிழ்மொழியில் அச்சிடப்பட்டது. குறித்துக் கொள்ளுங்கள். சீகன்பால்க் —ஓர் ஜெர்மானியர்— (தமிழன் அல்ல) மொழியாக்கம் செய்தவர் தமிழுக்குப் புத்துயிரும் எழுத்துச் சீர்திருத்தமும் தந்தவர்கள் கிறிஸ்த்துவ மிஷனரிகள்.

புதிய ஏற்பாட்டை நான் மூன்று பிரிவுகளாக காண்கின்றேன்.

1. கிறிஸ்துவை நான் அறிந்து கொள்வது எப்படி?
2. கிறிஸ்துவுக்குள் தேவனுக்கு கீழ்ப்படிவது எப்படி?
3. கிறிஸ்தவனாக நான் வாழ்வது எப்படி?

1. கிறிஸ்துவை நான் அறிந்து கொள்வது எப்படி?

- மத்தேயு
- மாற்கு
- லூக்கா
- யோவான்

ஆகிய இவர்கள் எழுதிய சுவிசேஷம் கிறிஸ்துவை திட்டமாக நாம் புரிந்து கொள்வதற்கு வழிகாட்டுகின்றது.

2) கிறிஸ்துவுக்குள் நான் தேவனுக்கு கீழ்ப்படிவது எப்படி? அப்போஸ்தல நடபடிகளை வாசியுங்கள்.

இனம், மொழி, சாதி கலாச்சாரம் ஆகிய இவைகளுக்கு மேலாக,

ஒரே மாதிரியான அச்சில் வார்த்தாற்போல் ஒரே ஐக்கியத்தை அடைய விரும்பும் கிறிஸ்தவனாக மாறும் முறையை சுமார் ஒன்பது சான்றுகளுடன் போதிக்கின்றது!

| நாடுகளும் பட்டணங்களும் | ஒரே மாதிரியான உபதேசம் ஞான ஸ்நானம் | | | இரட்சிப்பு |
|---|---|---|---|---|
| எருசலேம் | " | அப். | 2 | " |
| சமாரியா | " | " | 8 | " |
| எத்தியோப்பியா | " | " | 8 | " |
| தமஸ்கு | " | " | 9 | " |
| செசரியா | " | " | 10 | " |
| லீஸ்திரா | " | " | 16 | " |
| பிலிப்பு | " | " | 16 | " |
| கொரிந்து | " | " | 18 | " |
| எபேசு | " | " | 19 | " |

ஒரே உலக இரட்சகரை இன்றைக்கு நம்பும் கிறிஸ்தவர்களின் மத்தியில், சுமார் 1800 மாரக்க பிரிவினைகள் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். இதற்குக் காரணம் என்ன?

''வேதாகமம் பேசுவதை பேசவேண்டும், வேதாகமம் பேசாததை பேசக்கூடாது.'' என்ற கோட்பாட்டிற்கு மக்கள் திரும்பாமல் இருப்பதுதான்.

சென்னைக் கடற்கரையிலும் மற்றும் தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களிலும் 10 வித்தியாசப்பட்ட சபைகள் ஒன்றுகூடி விசேஷ கூட்டங்களை நடத்துகின்றனர். எல்லோருடைய கைகளிலும் ஒரே மாதிரியான வேதாகமம்தான். ஆனால் அவர்களின் போதனைகளோ வெவ்வேறானவைகள்.

சிலுவையின் ஐக்கிய போதனை இன்று சந்தி சிரிப்புக்கு இடமாக்கப்பட்டுள்ளது.

என்ன வேதனை!

இதை எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.

இந்த நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் பிரிந்து பிரிந்து போனதைப் போல் எப்பொழுதும் இப்படி நடந்ததில்லை.

இதற்குக் காரணம் என்ன?

கிறிஸ்து சபையின் ஆரம்ப அச்சடையாளங்களை உபதேசங்களை விசுவாசிகள் அப்போஸ்தலருடைய நடபடிகளில் தடிப்படிப்பதில்லை. மாந்த ஞானத்தைப் பின்பற்றி சோரம் போகிறார்கள்.

''இன்றைக்கு இந்தியாவிலே, ஐரோப்பியர் வருகைக்கு பிற்பட்ட கிறிஸ்தவத்தைத்தான் மார்க்கமாக கொண்டுள்ளனர். ஆனால் அதைவிட்டு முதல் நூற்றாண்டு மார்க்கத்தைத்தேடி தங்கள் மார்க்கமாக வாழ்தல் வேண்டும்!''

ஒருவன் கிறிஸ்தவனாக மாறுவது எப்படி என்ற கேள்விக்கு அப்போஸ்தலர் நடபடிக்கை மட்டுமே உங்களுக்கு பதிலளிக்க முடியும்.

3. கிறிஸ்தவனாக நான் வாழ்வது எப்படி?

நல்லது!

சுவிசேஷத்தை கேட்ட ஒருவன் அப்போஸ்தலரின் நட-வடிக்கைகளில் தேவனுக்கு எப்படி கீழ்ப்படிவது என்பதை அறிந்து கிறிஸ்தவனாக மாற்றப்பட்டு சரீரமாகிய சபைக்குள் சேர்க்கப்-படுகின்றான்.

இப்பொழுது

ஓர் கிறிஸ்தவன் தன்னுடைய சரீர மரணமோ அல்லது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையோ எது முந்தியோ அது வரைக்கும்.

ஆவிக்குரிய வளர்ச்சியடைவதற்கு களங்கமில்லாத ஞானப் பாலாகிய திருவசனத்தின் மேல் வாஞ்சையாய் இருத்தல் வேண்டும். (1 பேது 2:3)

நிருபங்கள் 21.

எதற்காக இவைகள்?

வளரும் தேவனுடைய மக்களுக்கு இவைகளே.

உபதேசங்கள்.

போதனைகள்

ஆறுதல்கள்.

இவைகளே ஆரோக்கியமான உபதேசங்கள்

**தீர்க்க தரிசன நூல்**

தீர்க்க தரிசன நூல் 1. — வெளிப்படுத்தின விசேஷம்

அந்நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு
சொல்லொணா துன்பம் பாடுகள். பொறுமை
யோடு சகிக்க வேண்டுகோள். கிறிஸ்து
மீண்டும் வருவார் — ஆறுதல். வெற்றி நமதே.

**செம்படவஞானி**

# ஒரு பெரிய கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது

எபேசு பட்டணத்திலே, கிறிஸ்துவைப் பற்றிப் போதித்த அப்போஸ்தலர் பவுலுக்கு நிறைய எதிர்ப்புகளும் இடையூறுகளும் ஏற்பட்டன. அச்சமயத்திலே, கொரிந்து சபைக்கு அவர் கீழ்க்கண்டவாறு எழுதுகிறார். ''ஆகிலும் பெந்தெகொஸ்தே பண்டிகை வரைக்கும் எபேசு பட்டணத்தில் இருப்பேன்; ஏனெனில் இங்கே பெரிதும் அனுகூலமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது; விரோதஞ் செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்'' (1கொரி. 16:8,9). இன்னும் பல மாறுபட்ட கதவுகள் பற்றி வேதாகமம் குறிப்பிடுகிறது. ''நானே வாசல்'' என இயேசு கூறினார் (யோ. 10:1,2,7,9). கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க அப். பவுல் துரோவா பட்டணத்திற்குச் சென்றபோது, தனக்குக் ''கதவு திறக்கப்பட்டிருந்ததாகக் கூறுகிறார். (2 கொரி.2:12).

''கதவு'' அல்லது ''வாசல்'' என வேதாகமத்தில் குறிக்கப்படும் சொற்கள் ''சந்தர்ப்பங்களைக்'' குறிக்கின்றன. ''திருவசனம் சொல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள்'' என கொலோசெயர் 4:4ம்வசனத்தில் சொல்லப்படுவதைக் கவனியுங்கள். புற ஜாதிகளுக்கு வசனத்தைப் போதித்து விட்டு பவுலும், பர்னபாவும் அந்தியோகியாவுக்குத் திரும்பியபோது, ''தேவன் தங்களைக்கொண்டு செய்தவைகளையும், அவர் புறஜாதிகளுக்கு விசுவாசத்தின் கதவைத் திறந்ததையும்'' அறிவித்தனர். (அப்.14.27). துரோவாவில் சுவிசேஷத்தைப் போதிக்கக் கிடைத்த சந்தர்ப்பமே ''திறந்த வாசல்'' என வர்ணிக்கப் படுகிறது. (2 கொரி. 2:12). இப்படிப்பட்ட ''வாசல்கள்'' இன்றும் நமக்குத் திறக்கப்பட்டுள்ளன.

**உபதேச வாசல் திறக்கப்பட்டுள்ளது.**

உபதேச வாசல் வழியாக மனிதன் தன்னிடம் வந்து சேரவேண்டுமென்பது ஆதி காலந்தொட்டே தேவனுடைய திட்டமாக இருந்து வந்துள்ளது. ''என்னிடத்தில் வாருங்கள்.... என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்'' என இயேசு கூறவில்லையா? (மத் 11: 28, 29). கற்றுக் கொள்ளாமல் அவரிடத்தில் யாரும் வர முடியாது ஏனெனில், ''என்னை அனுப்பினபிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்.... ஆகையால், பிதாவினிடத்தில் கேட்டுக் கற்றுக் கொள்கிறவன் எவனும் என்-

னிடத்தில் வருகிறான்,'' என யோவான் 6: 44, 45 வசனங்கள் கூறுகின்றன.

இந்த ''உபதேச வாசல்'' சகலருக்கும் திறக்கப்பட வேண்டும் என்பது தேவனின் கட்டளை என்பதைக் கீழ்க்காணும் வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன: ''நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்.... நீங்கள் உலகமெங்கும் போய் சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.... எல்லாரும் தேவனாலே போதிக்கப்பட்டிருப்பார்கள்.... '' (மத். 28: 19; மாற்கு 16: 15; 6: 45). இரட்சிப்பு உபதேசத்தைப் சார்ந்திருப்பதால், யாருமே உபதேசத்திலிருந்து விடுபட்டுப் போகக் கூடாது; ''கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான். அவரை விசுவாசியாதவர்கள் அவரை எப்படி தொழுது கொள்ளுவார்கள்....? விசுவாசம் கேள்வியினாலே வரும்'' ரோமர் 10: 13—17). இந்த வாசலை ஒரு போதும் தேவன் அடைத்து வைக்க வில்லை. அது சகலருக்கும் திறந்த வாசல்.

இந்த உபதேச வாசல் வழியாக நாம் கிறிஸ்துவை அடைவது மட்டுமல்லாமல், கிறிஸ்துவில் நாம் வளர்ச்சியடைய நமக்குத் தரப்பட்ட ஒரு சந்தர்ப்பமும் ஆகும். நீங்கள் பக்தி விருத்தியடையவும், பரிசுத்தமாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்திரத்தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள வசனத்துக்கும் உங்களை ஒப்புக் கொடுக்கிறேன் ''(அப் 20: 32) படிப்படியாக முன்னேற்றமடைந்த இந்த வளர்ச்சியை கொலோ 2: 6- 7 வசனங்களில் நமக்கு படம் பிடித்துக் காட்டுகிறார் அப்- பவுல்: ''நீங்கள் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக் கொண்டபடியே, அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும், அவர் மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்து கொண்டு, நீங்கள் போதிக்கப்பட்ட படியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக. உபதேசத்தின் வழியாக நாம் கிறிஸ்துவுக்குள் வருகிறோம்; உபதேசத்தின் வழியாக கிறிஸ்துவில் நாம் வளர்ச்சி அடைகிறோம். ஆதிக்கிறிஸ்தவர்கள் வசனத்தைக் கேட்டு வளர்ந்ததைப் போல, நாமும் வளர்ச்சியடைய முடியுமே? ''அவர்கள் அப்போஸ்தலர்களுடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் (''அப். 2: 42). நமக்காக ''ஒரு பெருங் கதவு'' திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதில் நுழைந்து, கற்றுத் தேர்வோம்.

## இரட்சிப்பின் கதவு திறக்கப்பட்டுள்ளது

தேவனுடைய குமாரன் இவ்வுலகில் மனித உருவில் அவதரிக்க வேண்டிய முக்கிய காரணமே ''பாவிகளை இரட்சிக்கத்தான்''

(1 தீமோ 1: 15). ''இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்'' என்பதாக அவருடைய பணி பற்றி இயேசு சுருங்கக் கூறினார். (லூக் 19:10). அவருடைய ஊழியம், அவர் செய்த அற்புதங்கள், அவருடைய போதனைகள், அவருடைய முன் மாதிரியான வாழ்க்கை, அவருடைய தியாக மரணம் இவை எல்லாவற்றிற்கும் ஒரே ஒரு காரணமே இருந்தது; இழந்து போனவர்களை இரட்சிப்பதுதான் அக்காரணம். அவருடைய பணியின் முக்கியத்துவம் பற்றி, ''அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை'' என்பதாக தேவனுடைய வசனம் கூறுகிறது. (அப். 4:12) கிறிஸ்துவுக்குள் ஒருவன் இரட்சிக்கப்படாவிட்டால் அவனுக்கு ஒருபோதும் இரட்சிப்பு இல்லை! ''நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்'' (யோவான் 14:6) என அவர் கூறியது போல, இரட்சிக்கப்பட வேறு வழியே கிடையாது. அவர் ஒருவரே இரட்சகர்; தேவனை அடைய அவர் ஒரே வழி.

''நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்'' (யோவான் 10:9) என்று இயேசு கூறினார். இரட்சணியத்தின் வாசலை அவர் சகல மனிதர்களுக்கும் திறந்து வைத்தார். ''தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'' (யோ. 3:16) ''எவனோ'' என்று கூறும்போது எந்த தனி மனிதனும் விடுபட்டு போகவில்லை! நமது இரட்சகர் தனது அப்போஸ்தலர்களுக்குக் கட்டளையிட்டதாவது:- ''நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிஷேசத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' அவருடைய இரத்தத்தால் இரட்சண்ய வாசல் திறக்கப்பட்டுள்ளது. ஏனெனில், ''எல்லாரும் பாவஞ் செய்து, தேவ மகிமையற்றவர்களாகி, இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவினுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள் . . . . கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதர பலியாக அவரையே ஏற்படுத்தினார்'' (ரோமர் 3:23-26). எனவே, இரட்சிப்பிற்குள் யாரும் வரத்தவறினால், அதன் முழுப்-பொறுப்பும் அவனையேச் சாரும். ஏனெனில், ''எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்'' (1 தீமோ 2:4). சகல பாவிகளுக்காகவும், கல்வாரி மலையிலே தேவன் இரட்சிப்பின் வாசலைத் திறந்தார். தமது நற்செய்தியிலே அதை அறிவிக்கிறார் : (ரோமர்

1:16). அதை அறிந்து செயல்பட வேண்டியது ஒவ்வொரு மனிதனின் பொறுப்பு.

தேவனுடைய அந்த திறந்த வாசலை பாவிகள் எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதை அப்போஸ்தலருடைய நடபடிகளில் காணும் பல சம்பவங்கள் நமக்குத் தெரிவிக்கின்றன. தேவனுடைய செய்தியை பாவிகள் கேட்டபோது, "இருதயத்திலே குத்தப்பட்டவளாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் ...... அவனுடைய வார்த்தையை சந்தோஷமாக ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்." (அப். 2:37-41). மீண்டுமாக, "அவர்கள் விசுவாசித்தபோது .... ஞானஸ்நானம் பெற்றார்கள்" (அப். 8;12); "பிலிப்பு இயேசுவைக் குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான் .... அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள்; பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்" (அப். 8:35-38), "உபதேசக் கதவை' நோக்கிச் செல்லும் இத்தகைய பல சம்பவங்களை அப்போஸ்தலரின் நடபடிகள் 9:6, 18:10:48; 16:30-34; 18:8; 22:16 ஆகிய வசனங்களில் காணுகிறோம். ரோமர் 6:3-6 வசனங்களிழ் இந்த திறந்த வாசலைப் பற்றிய படயிடிப்பை அப். பவுல் நமக்குக் காட்டுகிறார்: "கிறிஸ்து இயேவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மாணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்குறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலேயே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதாள ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம், நாம் இனி பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு ...... நம்முடைற பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்". தேவன் திறந்து வைத்துள்ள இந்தக் கதவின் வழியாக நாம் பிரவேசித்து இரட்சிப்படைய வேண்டுமென்பது அவர் விருப்பம்.

### ஊழியக் கதவு திறந்துள்ளது

இரட்சணிய வாசல் வழியாக மக்கள் பிரவேசிக்கும் போது, மீண்டுமாக நமக்கு ஒரு கதவு திறக்கப்படுகிறது. இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்

கொண்டு வந்தார்.'' (அப்.2:47). இரட்சிக்கப்பட்டவர்கள் சபையில் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். ஊழியம் செய்வது சபையின் பணியாகும். பிலிப்பிய சபைக்கு பவுல் எழுதும் போது, ''தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்'' என்கிறார். (பிலிப்.2:13). ''உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று'' இரட்சிக்கப்பட்டவர்களுக்குச் சொல்லப்படுகிறது. (ரோமர் 12:1). தேவனுடைய கட்டளைக்குக் கீழப்படிந்து, இரட்சிக்கப்பட்ட பாவிகள், ஊழியம் செய்யும் ஒரு வாழ்க்கைக்கு உயர்த்தப்படுகின்றனர். ''மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்'' என அவர்களுக்குச் சொல்லப்படுகிறது. (எபே. 4:24). இயேசு இவ்வுலகில் வாழ்ந்த போது ஊழியம் செய்தார். அப்படியே, மனுஷ குமாரனும் ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்'' என இயேசுவே கூறுகிறார். (மத்.20:28). அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றினால், நாமும் ஊழியஞ் செய்யும் பக்குவத்தை அடைவோம். (1 பேதுரு 2:21). ஒரு உண்மையான சீடன் ஊழியங் செய்கிறவனாக இருக்கவேண்டும். ''நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்'' 1பேது 5:5).

''பரிசுத்தவான்கள் சீர் பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும்'' ஆதி சபையானது சிறப்பாக ஊழியஞ் செய்து வந்துள்ளது (எபே 4:12). தங்கள் சொத்துக்களையும் இதர உடமைகளையும் கூட விற்று அப்பணத்தைக் கொண்டு நலிந்த சகோதரர்களின் சரீரத் தேவைகளைச் சந்திக்க முன் வந்தனர். ஆவிக்குரிய காரியங்களிலும் ஒருவருக்கொருவர் உதவி வந்துள்ளனர் என்பதை, 'சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனை சீர் பொருந்தப் பண்ணுங்கள்.... ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்' என்ற வசனங்களில் காணலாம் (கலா 6:12). இயேசுவின் சிலுவைப்பாடுகளை தினமும் உபதேசித்து, 'இழந்து போனவரை மீட்கும்'' பணியில் மும்முரமாக ஈடுபட்டனர். (அப் 5:42; 8:4). அவர்கள் மடங்களிலே முடங்கிக் கிடக்கவில்லை மாறாக, மக்களைத்தேடி அலைந்தனர். இன்றைய தகடுதத்தங்கள்

நிறைந்த உலகிலே, மக்களைத் தேடிப்பிடித்து இரட்சணியப் பாதைக்கு நாமும் அழைத்து வரவேண்டாமா? எபேசு பட்டிணத்திலே பவுலுக்காக "ஒரு பெரிய கதவு திறக்கப்பட்டிருந்தது. நமக்கும் அவ்வாறே ஒரு பெருங்கதவு திறந்து வைக்கப்பட்டுள்ளது. நாம் உண்மையான ஊழியர்களாக இருப்பின், அதை பயன் படுத்திக் கொள்ளவேண்டும்"..... இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன். அதை ஒருவனும் பூட்ட மாட்டான். என இயேசு பிலதெல்பியா சபைக்கு கூறியது போல நமக்கும் கூறுகிறார். (வெளி, 3:8)

## பரலோகத்தின் வாசல் திறக்கப்பட்டுள்ளது

"நானே ஆடுகளுக்கு வாசல்.... நானே வாசல்; என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான்" என இயேசு கூறினார். (யோ. 10: 7, 9). தனது சீடர்களை விட்டு அவர் பிரிந்து செல்லுமுன்னர், அவர்களிடம் கூறினார்: என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களே இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்.. நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" .(யோ. 14: 2- 6)- இயேசு நமக்காகத் திறந்து வைத்துள்ள மற்ற வாசல்கள் வழியாக நாம் பிரவேசிக்கும்போது, பரலோகத்தின் வாசலை நமக்காகத் திறக்கிறார். குறைபாடுகள் நிறைந்த இவ்வுலகில் நாம் உழன்று கொண்டிருப்பதால், பரலோக இராஜ்ஜியத்தின் பரிபூரண மகிமையைப் பற்றி நாம் அறிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறோம் இருந்தபோதிலும், பரலோகத்தைப் பற்றிய சில விவரங்களை தேவனுடைய வசனங்கள் வழியாக தெரிந்து கொள்ள முடிகிறது. "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டு என்று அறிந்திருக்கிறோம். " (2 கொரி. 5: 1). "இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே அழியாததும் மாசற்றதும் வாடாதுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி தமது மிகுந்த இரக்கத்தின் படியே மறுபடியும் ஜெபித்தார்..... உங்களுக்கு அந்த சுதந்திரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது. சபையைப் பற்றி வசனங்கள் வழியாக நமக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள ஆவிக்குரிய வர்ணனைகளை பரலோகத்திலே நாம்

உண்மையிலேயே அநுபவிக்கக் கூடியவர்களாயிருப்போம். "அவர்களுடைய கண்ணீர் பாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமும் இல்லை. (வெளி. 21: 4). வெளிப்படுத்தின விசேஷம் 22ம் அதிகாரம் 1முதல் 5 வசனங்களில் யோவான் இக்காட்சியை அருமையாக வர்ணிக்கிறார்:

"பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணிருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக் குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை எனக்குக் காண்பித்தான்.... நதியின் இருகரையிலும் பன்னிரண்டு விதமான கனிகளைத் தரும் ஜீவ விருட்சம் இருந்தது.... அங்கே இராக்காலம் இராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள் மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதா காலங்களிலும் அரசாளுவார்கள்".

நாம் கற்றுத் தேர்ந்து, கிறிஸ்து வழியாக தேவனை அடைய, உபதேச வாசலை தேவன் திறந்து வைத்துள்ளார். சிலுவை இரத்தத்தினால், இரட்சனிய வாசலை நமக்குத் திறந்து விட்டிருக்கிறார். நாம் அவரது பிள்ளைகளாக இருக்கிற படியால் பரலோகத்தின் வாசலை நமக்காக திறந்து வைத்துள்ளார் என்ற போதிலும், நாமே திறக்க வேண்டிய ஒரு கதவு உண்டு; நமது இதயத்தின் கதவே அது. "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவை திறந்தால், அவனிடத்தில் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன்" (வெளி 3:20). உனது இதயக்கதவை இயேசு கிறிஸ்து தட்டுகிறார்; நீ மட்டுமே அந்தக் கதவை அவருக்குத் திறக்கவேண்டும். ஏனெனில் அதற்கு உள்தாழ்ப்பாளே உண்டு. உனது வாழ்விலே வலுக்கட்டாயமாக அவர் பிரவேசிப்பதில்லை. நீ அவரை வரவேற்று அவருக்கு வழி விட வேண்டும். "ஒரு பெரிய வாசல் உனக்காகத் திறக்கப்பட்டுள்ளது."

**கிளம் தூர்மன் கொசவபட்டி S. S. ராஜன்**

## மானிடனே நீ விலங்கிலும் கேடு கெட்டவனா?

மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும். இஸ்ரவேலோ அறிவில்லாமலும் என்ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது என்றுமனம் நொந்து, 'நான் பிள்ளைகளை வளர்த்து ஆதரித்தேன்; அவர்களோ எனக்கு விரோதமாய் கலகம் பண்ணினார்கள்' என்று வேதனைப்படுகிறார். (ஏசாயா 1: 2, 3)

YOUR ATTENTION PLEASE !

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
The Voice of Truth, Post Box 3815, New Delhi- 110049
Mondays-9:00 to 9: 5 P. M.
Fridays - 7:45 to 8:00 P. M.

**HINDI** Satya Susasamachar-Speaker : Sunny David.
Satya Susasamachar, Post Box 3815, New Delhi- 110049
Thursdays-9:00 to 9-15 P. M.
Fridays- 9:00 to 9:15 P. M.
Tuesdays-9 00 to 9:5 P. M.
Sundays-12 45 to 1: 00 P. M.

**TELUGU** The voice of Truth-Speaker: Joshua Gootam
The Voice of Truth, Post Box 80, Kakinada 533001.
Sundays-2.15 to 2:30 P. M.
Tuesdays-2:15 to 2:30 P. M.
Thursdays-2:15 to 2:30 P. M.
Fridays -2:15 to 2:30 P. M.
Saturdays-2:15 to 2:30 P. M.

**TAMIL** The Way of Truth-Speaker : P. R. Swamy.
The way of Truth, Post Box 8405, Bangalore 560084
Tuesdays-5:30 to 5:45 P.M.
Thursdays-6:45 to 7:00 P.M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM** The Voice of Truth-Speaker: P. K. Varghese
Church of Christ Sunny Meads Lane Trivandrum-34 (Kerala)
Tuesdays-3:45 to 4:00 P.M.
Fridays-3:45 to 4:00 P.M.

**KANNADA** The Voice of Truth-Speaker : Robert Rathnakar
Box No 448, Bankalore 560004.
Sundays - 1:45 to 2:00 P.M.

## ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are avilable in these different languages from the addresses listed Also the radio sermons are available in book form.

Nov. 92 THIRUMARAI AASAAN Regd.No TN/ERD/49

## பாட்டுப் புத்தகம் கிடைக்கும்

20. M.M. ரெக்ஸின் அட்டை போட்டு, சிறந்த முறையில் பைண்டிங் செய்யப்பட்ட சுமார் 226 பாடல்கள் அடங்கிய பாட்டுப் புத்தகங்கள் விற்பனைக்கு உள்ளன. தபால் செலவு உட்பட, ஒரு பாட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 10/- மட்டுமே.

**வேண்டுவோர் தொடர்பு கொள்க :**

E.Z. செல்வ நாயகம், 2, மணல்மேடு வீதி,
ஈரோடு - 638 002.

Published by Church of Christ and Printed at Jeevasakthi Press
Erode-638 003.
Editor. E.Z. Selvanayagam.

PRINTED MATTER BOOK-POST

TO

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN
Post Box No. 58 ERODE-638 001.